வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

இந்து சாதனம்

HINDU SADHANAM

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

உதயம் விரோதி வரு (1889) ஆவணி மீ 28-ம உ அச்சகம்: சைவபபிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசனதுறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அக] யாழ்ப்பாணம்- பிங்கள வரு ஆனி மீ நக - உ வெள்ளிக்கிழமை (15 - 7 - 1977) [இல: கச

குருந்தமரக்காட்சி தரும் ஆன்ம குதூகலம்

[திரு. நா. செல்லப்பா]

சென்ற கட்டுரையில் கடவுள் மாமுனிவர் காட்டி யதிருப்பெருந்துறையின் அகப்பொருளை அவதானித்தோம். இப்பொழுது அங்கு விளங்கிய இயற்கை எழில் மலரும் ஒரு பூங்காவின் மத்தியில் பொலிவுற்றுத்தோன்றும் குருந்த மரத்தின் அகப்பொருளைக் கவனிப்போம். செயற்கை நெறியில் பயிற்றப்பட்ட திருவாதவூரடிகள். இயற்கை நெறியில் சுயமாகவே திருவருட்பேற்றினால் எவ்விதம் மெய்யுணர்வு மலரப் பெறுகிறார் என்பதற்குக் குருந்தமரக்காட்சி நல்ல தோர் எடுத்துக்காட்டாகும். நாமும் இக்காட்சியில் திருவருளால் ஊறித்திளைத்து உண்மை விளக்கம் பெறுவோமாக!

குருந்தமரக்காட்சி ஒரு மாசறு காட்சியாக அமைகிறது. நம்மிடமுள்ள மாசு நீக்கியவிடத்துத்தான் மாசறுகாட்சி சுயமாகவே புலப்படும். அதற்கு நாம் இப்பொழுது யாது செய்தல் வேண்டும்? நமது மனம் இன்பதுன்பங்களைச் சார்ந்து இருமையாகிய நிலையில் காணுகின்ற சார்புக்காட்சியை விட்டு நீங்குதல் வேண்டும். அருணகிரிநாதர் கூறியது போல் "கொடிய ஐவர் பராக்கறல் வேண்டும்! மனமும் பதைப்பறல் வேண்டும்" நாம் எதனையோ இயற்கை அழகைக் கண்ணாரக் கண்டு மூளையில் பதித்து வைத்திருக்கிறோம். அதேபோல் அவற்றைப்பற்றி ஆசிரியர்கள் வாயிலாக காதாரக்கேட்டுப் பதியவைத்துளளோம். இவ்விந்திரிய வாயிலாகப் பெற்ற அழகுச்செல்வத்தை நினைவுகூர்ந்து, குருந்தமரக காட்சியுடன் ஒப்புநோக்கிப் பரவசமடையலாம் மனக் கிளு திளுப்பு எய்தலாம். ஆனால் இவையாவும் மாசறு காட்சியாகாது என்பதை நன்கு தெளிந்து, எவ்விதமான எறிவையும் (projection) செய்யாது—மனவிருத்தியால் வரும் இன்பதுன்பங்களை ச்சாராது—இந்தச்சார்பின் தன்மையை உணர்ந்து —சார்பு கெட்டுப்போகும் வண்ணம்—குருந்தமரக்காட்சியை மாசற்றுக் காண்போம். மணிவாசகரும் இவ்விதம தான் கண்டார்.

குருந்தமரத்தை நாம் நிர்விகல்பமாக அவதானிக்கும் போது, நமக்குத் தோன்றுவது அதன் பசுமையும் இயற்கை வனப்பும் மிக்கவுள்ள நெருங்கிய கிளைகளும். சுயமாகவே இயற்கையாக மலர்ந்து ஒளிபெற விளங்கும் பூக்களுமேயாகும், கிளைகளும்' குழைகளும், தழைகளும், பூக்களும் வளர்ந்ததும் மலர்ந்ததும் இயற்கையாகவேயாகும். இங்கே செயற்கைத்திணிப்பு எதையும் காணோம் இயற்றின கவினுறுவனப்புகள் யாவும் சுயமாகவே உள்ளிருந்து வளர்ந்து மலர்ந்து மிளிர்வதைக் காணகிறோம். இவையாவும் குற்றமற்ற மானதக்காட்சியாகப்புலப்படுகிறது. இக்காட்சி கடவுள் மாமுனிவரின் உண்மை உணர்வில் ஆன்மீகக்கட்சியாக மாசறு விளங்குகின்ற மாட்சியை அவதானிப்போம்.

வளர்சசி 2-ம் பக்கம்

ஆடிப் பிறப்பென்றால் யாரும் நினைப்பது ?

"இறை — ஒளி"

ஆடிப் பிறப்பென்றால் யாரும் நினைப்பது
தாடிப் புலவனார் தந்தவக் — கூடிப்
பனங்கட்டிக் கூழினைப் பருகும் பழமை
மனங்கிட்ட வைப்பதை யே.

வண்ணை. வீரமாகாளி அம்பாள் கோயில்

சங்கிலியனது குலதெய்வமான வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் பாலஸ்தாபன வைபவம் ஆவணி மாதம் 19 ந் திகதி காலை 10 30 மணிக்கு நடைபெறும். (ந, நி,)

சுந்தரர் குருபூஜை

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நல்லை ஆதீனத்தில் 24-7-77 ஞாயிறன்று சிறப்பாக நிகழும். காலை அபிடேகம், நண் பகல் மாகேஸ்வரபூசை. ஆதீன மாணவன் பண்ணிசைச் செல்வன் நா. ஞானச் செல்வன் சுந்தரர் தேவாரம் பண்ணிசைநிகழ்ச்சியும் வீதி உலாவும் நிகழும் அன்றையவிழாவில் தவில் மேதை தெட்சணாமூர்த்தியின் மகனுக்கு ஆதீன கௌரவிப்பு நிகழும்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் இன்னிசை விரிவுரைகள்

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள தொடர் விரிவுரைகள் நிகழுமிடங்கள் ;

மாவை. கந்தன் ஆலயத் திருவிழாவில் 21-7-77 வியாழன் முதல் தினமும் மாலை கந்தபுராணம் தொடர்விரிவுரை நிகழும்.

யாழ். அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் 19-7-77 முதல் திருவிழாவில் மாலை 7 முதல் பெரியபுராண விரிவுரை நிகழும்.

நீர்வேலி வாய்க்காற்றரவை பிள்ளையார் ஆலயத்தில் 19 ந தேதி முதல் மகாபாரத விரிவுரை நிகழும (ந. நி.)

புங்குடுதீவு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் கோயில்

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா வருகிற (21-7-77) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 29-7-77 வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் சனி, ஞாயிறு, திங்கள் தீர்த்தம் பூங்காவனம். வைரவர் மடை ஆதிய விழாக்களும் நிகழும், 10 ம் தேதி ஆடிப் பூரத் திருவிழா நிக்ழும். அன்னதான சபையினரால் வழமை போல் அன்னதானப்பாலிப்பு நடாத்தப் பெறும். விழாக காலத்தில் சமயச் சொறபொழிவுகள் தினமும் நிகழும்.

மாவைப் பதி வைகும் மயில்வாகனக் கடவுள்

வருகின்ற வியாழக்கிழமை பெருந் திருவிழா ஆரம்பம்

இவ்வாண்டு மாவை ஆதீனப் பெருந்திருவிழாக்கள் ஆடித்திங்கள் 6-ஆம் நாள் வியாழக்கிழமை (21-7-1977) ஆரம்பமாகும் வேளையில் மாவை முருகன் கவிப்பூங் கொத்து" என்ற அரிய தொகுப்பு வெளியீட்டைப் பற்றி இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

மயிலங்கூடல் முருகபத்தர் திருவாட்டி சின்னத்தங்கம் சிறீரங்கம் நினைவு வெளியீட்டுக்கு பதிப்பாசிரியராயிருந்தவர் சைவப் புலவர் சி, அப்பாத்துரை ஆசிரியர். துணை ஆசிரியராகக் கடமை புரிந்தவர் சைவப் புலவர் பி. நடராசன் ஆசிரியர். பொருளின் பெருமையைப்பேணும் அருமை விளக்கும் இத் தொகுப்பிலுள்ள சில பாக்கள் இங்கே அமைக்கப்படுகின்றன.

சத்தியந நெறிகிட்ட தியனேன் புரிவினைகள்
தக்கவா றளவைசெய்து
தலைவநீ கற்பித்த படியன்றி இடையொன்று
தமியேனை அடைவதில்லை
இத்துணை விருந்துமென புத்திதிட மிம்மையா
லெண்ணுத வெண்ணமெண்ணி
யாதுவரு மோவெனக் கருதிநித மேங்குவேன்
யாவுநீ யறிந்துண்டாய்
சத்திதர வோங்கார திவ்விய சடாக்கர
தமோகுண தீதமுதலே
சரவணோற் பவகர சகாயபரி சுத்தசிற்
சைதன்விய ரூபவாழ்வே
பத்திசெயு மெய்ப்பன்பர் சித்தமிசை குடிகொண்ட
பரிபூர ணானந்தமே
பாவலா தேவர்தங் காவலா மாவையம்
பதியிலுவதி கந்தவேளே

— சுன்னைக் குமாரசுவாமிப் புலவர்

செம்பிற் களிம்பென்ன மருவுமா ணவமலச்
சேட்டைடா லறிவிழந்தே
செய்வதுந் தவிர்வதுந் தெரியாம லலையுநான்
தீமைடல புரிதலியல்பே
வெம்புமம் மலமாயை கன்மத் தொடக்கிலா
விமலநீ கருணையாலே
மிகுபிழை பொறுத்துமே னெறிநாட்டி யாட்கொண்டு
விடுவதுன் கடமையன்றோ
அம்புவி தனிற்கலி யுகத்திலே கண்கண்ட
வற்புதக் கடவுணீயே
ஆற்றமுடி யாததுய ராற்றியுன் பொன்னடி
யடைக்கலங் காக்கருளுவாய்
மன்பதைக் கருள்புரிய வென்றரு ளுருக்கொண்டு
மாவையந கரதனில் வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே,

— தங்கத் தாத்தா
நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

சாவகச்சேரி சப்பச்சிமாவடிப் பிள்ளையார்கோவில் மகா சங்காபிடேகம்

சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் கோவில் சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் 8-6-77இல நடைபெறறு 40 நாடகள் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நிகழ்நது வருகிறது இவை (22-7-77) வெள்ளிக்கிழமை பூர்த்தியாகும். அன்றைய தினம் பகல் சஹஸ்ர (1008) சங்காபிஷேகமும் இரவு திருவிழாவு நடைபெறும் மாலை 7 மணிக்கு பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாககுட்டி அவாகள் "ஆலயத திருப்பணியும் கும்பாபிஷேகமும்" எனும் பொருள்பற்றி உபந்நியாசம் செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழிய அந்தணர் வானவராவினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

பிங்கள ஞு ஆனி மீ நகஉ வெள்ளி

மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருக்கிப் பாயும்

நாட்கள் நெருங்கிவிட்டன. வாக்காளரின் போக்கு புலப்படுத்தப்படும் வியாழன் வர இன்னும் ஐந்தே நாட்கள் உண்டு. வேகம் விரைந்து வெகுவாகும் வேளையில் நேர்மையும் நிதானமும் சோர்வடையக்கூடும். வெற்றி பெற்றுக்கொள்ள வெம்பகை மூட்டப்படுதலும் உண்டு. ஆனால் ஈழத் திருநாட்டில் வாழும் தமிழ் பேசும் இனம் ஆளவேண்டிய நடைமுறை ஒன்றுண்டு. அது தொன்றுதொட்டு வழங்கி வந்த பெருந்தன்மை என்ற சற்குணம்.

கூத்தாடுபவர்களிலும்பார்க்கக் கூத்துப் பார்க்கின்றவர்கள் குழப்பங்கொண்டுவர உழைப்பது வழக்கம். பக்கம் கட்டிக்கொண்டு அமைதிக்குப் பங்கம் விளைவிப்பது எவ்வாற்றானும் ஒவ்வாது. அந்த முயற்சி தண்டனைக்குரிய குற்றம் என்ற அளவில் விட்டுவிடாது வேட்பாளர்கள் அனைவரும் எஞ்சியிருக்கும் ஐந்து நாட்களிலும் கண்டனத்தை விலக்கி காரியாநுகூலத்துக்குரிய சீரிய பாதையில் ஆதரவாளர்கள் செல்வதை வற்புறுத்துதல் அவசியம்.

பழந் தமிழ்ப் பண்பு யாது என்று பள்ளிக்கூடங்களில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி நன்னெறி மூதுரை போன்ற சின்னஞ் சிறு நூல்களிலிருந்து பாலியப் பருவத்தில் யாவரும் அறிந்திருப்பர். 'பாராங் கல்லையும் நேராய் ஊற்றெடுக்கும் நீர் காலாகதியிற் பிளந்து வைக்கும் என்று ஆன்றோர் கூறினார்களே. என்ன இன்பமான வழி இது! அன்னதை விலக்கித் துன்பமான முறையில் நிற்பது பயன் தராதென்பதைச் சுட்டிக காட்ட வேண்டுமா? அப்பர் சுவாமிகள் அறநெறி ஆளர். இறைநெறி என்ற இன்ப வழியைக் காட்டுமுகமாகப் பழமொழிப் பதிகம் பாடியருளியிருக்கின்றார், அப் பொன்மொழிகளில் ஒன்று 'கனியிருக்கக்காய்கவர்ந்த கள்வனேனே என்பது கனிவான நனிபயனான இனிய சொல்லும் செயலும் இருக்கவும் புளிப்பானதை ஏனோ மனிதன் நாடவேண்டும் என்ற நாவுக்கரசரின் தேன்மொழியைச் சற்றுச் சிந்திக்க வேண்டாமா?

உலக நெறி உரைத்த வள்ளுவனாரோ "தீயினாற் சுட்ட புண் உள் ஆறாது; ஆறாதே நாவினாற் சுட்ட வடு" என்று மிக விளக்கமாகப் பொருத்தமாக அநுபவ சித்தாந்தத்தை எடுத்துக் காட்டியிருக்கின்றார். மேலும் பொய்யாமொழியிலே "சினம்" என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்" என்பதை ஈண்டு நோக்குவது நன்று. தமிழ் பேசும் இனத்தைக் காக்கவேண்டுமேயானால் சினத்தைக் கைவிடவேண்டும். கருத்துக்கள் பல வேறாக இருந்தால் என்ன? பொருத்தமானதைத் தமிழ் பேசும் இனத்து வாக்காளன் புரிந்து கொள்வான் என்ற புகழ் உடையவன் என்பது பொய்யாதிருக்கட்டும்.

குருந்த மரக் காட்சி தரும்

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

அவருடைய ஆன்மீகக் காட்சியில் இந்த இயற்கைவனப்புப் பொலிந்த குருந்தமரம் "மெய்மை பூத்தறிஞர் போன்றெழில் பொருந்தி" விளங்குகிறது மெய்யுணர்வுடையோரை அவர் மெய்ம்மை பூத்த அறிஞர் என அழகாகவும் அற்புதமாகவும் அழைக்கிறார். இயற்கையாகவே உண்மை விளக்கம் உள்ளிருந்து திருவருளால் மலருகின்ற சிறப்பை அவர் சித்தரிக்கிறார் நாமோசெயற்கையாக இந்த ஒப்புவமையை இலக்கியரீதியிலிரசித்து, மனத்தில் ஓர் கிளுகிளுப்பை ஊட்டும் இன்பத்தை அடைகிறோம். இதனால நம்மிடம் மெய்மை எங்ஙனம் இயற்கையாகவே மலரமுடியும்? மற்றும் இலக்கிய நூலகளிலே வரும் ஒப்புவமைகளைப் போல இங்கு காட்டப்படும் ஒப்புவமை வெறும் மனோரசனைக்குரிய தொன்றன்று. இது தெளிந்து சாதனை புரிவதற்குரியதாகும்.

மலர் பூத்த குருந்தமரத்தை நிகர்த்த மெய்யுணர்வுடையோரிடம். அந்தமரத்தில் நெருங்கி வளர்ந்திருக்கும் கிளைகளைப்போன்று தவமும், தழைத்துத்திகழும் குழைகளைப் போன்று அறமும் பொலிவுறுகின்றது. இதிலிருந்து தவமும் அறமும் உடையோரிடம் மெஞ்ஞானம் இயற்கையாகவே மிளிரும் என்பது புலப்படுகிறது. தவமும் அறமும் கூட செயற்கையாகப் புற உலகிலிருந்தும், மனதபிரயத்தனத்தின் மூலமாகவும் நம்மிடம் திணிக்கப்படுதலாகா தென்பதும் தெளிவாகிறது. குருந்தமரத்தை நாமா வளர்க்கிறோம்? நமது பிரயத்தனததினாலா அதற்கு வளர்ச்சி உண்டாகிறது? அதனுடைய வளர்ச்சிகுத் தடையாயுள்ளவற்றை நாம் நீக்கி விடலாம் அதற்குச் சாதகமான ஒரு சூழலை ஆக்கலாம். ஆனால் அதுசுயமாகவே வளருதல் வேண்டும். நமது ஆன்மீக வளர்ச்சியும் இத்தகையதுதான் உலகப்பொருள்களையும், மன இந்திரியங்களையும சார்ந்து இருத்தலே நமது ஆன்மீக வளர்ச்சிகுத் தடையாகிறதென்பதை உணர்ந்து அந்தசார்பு நிலை நீக்கச் செய்யும் சாதனையே தவமாகும். இத்தடை நீக்கச் சாதனை ஒன்றேபோதும் இறைவனைச் சார வேண்டுமென்ற முயற்சி செயற்கையாகும். அது வேண்டியதலலை, பாசநீக்கம் நிகழும் போது மெய்யுணர்தல் சுயமாகவே மலருகிறது.

இத்தகைய விஷயத்தகு இயற்கை வனப்பு விளக்கங்களை உணர்ந்து கொண்டு கடவுள மாமுனிவர் காட்டும் குருந்தமரக்காட்சி பற்றி செய்யுளை நாம் படிக்கும் போது மனோலயம் இயற்கையாகவே,—தானாகவே—நமக்கு ஏற்படுகிறது இதோ அச்செய்யுள் படித்துப்பார்ப்போம்.

வாய்த்தவள மிவ்வகை வயங்குமத னுப்ப
னேத்தரு தவச்சிகை ளெங்கணு நெருங்க
மீத்திக முறக்குழை தழைத்துமிளிர் மெய்ம்மை
பூத்தறிஞர் போன்றெழில் பொருந்து மோர் குருந்தம்

(வயங்குமதன் நாப்பண்—விளங்கும் ஆப்பூங்காவின் மத்தியிலே, சிகைகள் - அறக்குழை—அறமாகிய இலைகள்)

செயற்கை நெறிபற்றிக் கல்வி பயின்ற திருவாதவூரடிகள் மெய்யுணர்தல் பெறாது, இயற்கை நெறிபற்றி பாசநீக்கத்தைச் சிவதீட்சை மூலம பெறுதற்கு இக்குருந்த மரநிழலில் அணுகும் காட்சி ஒவ்வொரு சைவனுக்கும் இதயசுத்தியை உண்டுபண்ணுதல் வேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் பெருமை வளமார் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்

"சிவன் ஒளி"

வண்ணை வடிவாம் பிகையன்னை நல்விழா
கண்ணைக் கவரும் கவினுடைத்து — மண்ணில்
வளம்பொலிய வைக்கும் மகாதேவி நண்ணி
உளம்புக வைப்பீர் உணர்ந்து,

அருள் ஒலி பரப்பும்

அம்பிகையின் ஆடிப் பெரு விழா

— உமா சங்கரி —

யாழ் நகர மக்களுக்கு அருள் ஒளி பரப்பி பக்தியும் அமைதியும் பெருகும் வகையில் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ இராஜ ராசேஸ்வரியின் ஆடிப் பெருந் திருவிழா அமைந்திருக்கின்றது

11-7-77 திங்கட்கிழமை கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பித்த இத்திருவிழா 21-7-77 வரை படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தல் அருளல ஆகிய இறைவனின் ஐந்து கருத்தியங்களை விளக்கும் வகையில் பெருவிழா நடைபெறுகின்றது. ஆன்ம ஈடேற்றத்துக்கான தமிழ் மறையோதுதல், வேதபாராயணம், சமயப் பேருரைகள், திருவுலா, மங்கள இசை முதலியன இப்பெரு விழாவின்போது மிகச் சிறப்பாக அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கன.

இப் பெருவிழாவை வேதாகம முறையிலிருந்து பிறழாது சிறப்பாக நடாத்தி வரும் பெருமை இவ்வாலயத்தின் வைதீக சிவாசசாரியப் பெரும்பரம்பரையில் வந்த பிரம்மஸ்ரீ கைலாசநாதக் குருக்கள அவர்களையே சாரும் என்னில் அது மிகையன்று. கூடவே பிரம்மஸ்ரீ இராமநாதக் குருக்களும் ஸ்ரீ சோமு ஐயாவும் கடமையாற்றுகிறார்கள். அம்பிகையின் அலங்காரத்தில் ஒரு புதிய பாணியை அமைத்து அருளும் அழகும் கம்பீரமும் நிறைந்த தோற்றத்தை மிளிர வைக்கும் பணியை ஸ்ரீரமணி ஐயா அவர்கள் மிக்க சிரதையுடன் நிறைவேற்றிவைக்கின்றார் இவ்வாலயத்தின் ஓதுவா

[வளர்ச்சி 3 ம் பக்கம்]

அச்சகத் தொழிலில் ஆற்றல் மிக்கவர்

அரனடி அமைந்த
நா. மயில்வாகனம்

தொழிலைத் தொழிலுக்காகப் புரியும் மனப்பான்மையை எல்லோரிடத்தும் காண முடியாது. புரியும் பணியின் மகிமையை நன்கு புரிந்தவர்களே தொழிலைத் தொண்டாய்க் கொள்வர். அத்தகையோர் எப் பணியைச் செய்தாலும் சித்தம் ஒன்றியே ஆற்றுவர். அவர்களாலே தொழிலுக்கும் தொழில் பெறுபவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்கும் எழிலுண்டாவது நிச்சயம்.

இத்தகைய பண்புள்ளவராக நாற்பதாண்டுகளுக்கு மேலாகச் சைவப் பிரகாச அச்சகத்திலே தொடர்ந்து அச்சுத் தொழிலில் ஈடுபட்டுச் சைவ பரிபாலன சபைக்கும் சமயத்துக்கும் உழைத்தவர் சுதுமலையைச் சேர்ந்த திரு. நா. மயில்வாகனம்.

ஆங்கிலமும் தமிழும் நன்று ஒருங்கமையும் அச்சுக கோப்பாளர். அச்சேற்றுபவர்கள் ஆகிய துறைகளில ஒரு சலரேயாளர், அச் சிலரில் முதல் வரிசையில் நின்றவர் திரு. மயில்வாகனம். இந்து சாதன ஆங்கில இதழின் அச்சமைப்புக்கு அநேக ஆண்டுகளாகப் பொறுப்பாயிருந்து திறம்பட செயலாற்றி வந்த இவர் எங்கள் அச்சகத் தொழில் அன்பர்களுக்குத் தலைமை நிலைமையைக் கண்ணியமாக நடாத்தி வந்தனர்.

மனப் பூரிப்புடன் எடுத்த பணியை நடத்தும் கனிவான மனிதன். மென்சொல்லும் மெல்லியநடையுமுள்ளவர். இடையிடையே நோய் வாய்ப்பட்டிருந்தும் தொழில் விருப்பத்தினால் தூண்டுதலினால் அச்சகத்தில் வேலையை அலட்சியஞ் செய்யாது ழைத்து வந்த திரு. மயில்வாகனம் ஈற்றில் வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டிருந்து பூரண சுகம்பெற்று தமது இல்லம் சென்று சிறிது ஓய்வெடுத்து வந்தனர்.

திரும்பவும் சிறிது நோய் கண்ட திரு. மயில்வாகனம் தமது 60ம் வயதில் 9-7-77 சனிக்கிழமை இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

உழைப்பை உத்தம தொண்டாகக் கொண்ட அரிய நண்பனின் பிரிவை அவருடன் பணி ஆற்றியவர்கள் யாவரும் தாங்காது நிற்கின்றனர். அன்னாரது இறுதிக் கிரியைகள் மறுநாள் நண்பகல் அவரது இல்லத்தில் நிகழ்ந்த அமையம் சபைத்தலைவர், திரு. ச. செல்வராசா செயலாளர் திரு. க. சிறம்பலம், பரீட்சைக் காரியதரிசி திரு. சி. சிவரத்தினம், அச்சக அதிபர் திரு. க. தர்மலிங்கம், அச்சக அன்பர்கள் ஆகியோர் திரு. மயில்வாகனம் அவர்களின் தயாள குணம், பண்பு, கடமை உணர்ச்சி ஆதியவைபற்றி இரங்கலுரையில் குறிப்பிட்டனர். குடும்பத்தினர்க்கு எம் அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம், அன்னாரது ஆத்மா சாந்தி அடைய அரன்கழல் தொழுவோம்.

அருள்ஒலிபரப்பும்

(2. ஆம் பக்கத்து வளர்ச்சி)

ராகிய திரு, கணேசசுந்தரம் அவர்கள் பெருவிழாவின்போது தமிழ்மறைகளை, குறிப்பாகப் பஞ்சபுராணங்களை ஓதும்போது உள்ளங்களைநெகிழத்தான் செய்கின்றன.

பெருவிழாவின் விசேட நிகழ்ச்சியாக பத்து நாட்களிலும் புலமையும் பாண்டித்தியமும் நிறைந்த மங்கையர்கள் சமயப் பேருரைகள் நிகழ்த்தி வருவது மிகச் சிறந்ததாகும் ஸ்ரீ அபிராமி பட்டர் குறிப்பிடும் அன்னையின் அருட்சக்தி வடிவத்தை இவ்வாலயத்தின் கருவறையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தையல்நாயகி அம்பாள் வடிவத்திலும், உற்சவ மூர்த்தியாகிய ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளிலும் மிளையாகக காணும் பாக்கியம் இப்பெருவிழாவின் போது உண்டு. இச் சந்தர்ப்பத்தை சைவப் பெருமக்கள் பிரயோசித்து அருள்நிலையைப் பெறுவார்களாக.

கோட்டுவிற்பனவு விளம்பரம்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில்

வழ இல. ஈடு: 552

அளவெட்டி சரவணமுத்து நாகலிங்கம் வாதி

எதிராக

அளவெட்டி செல்லையா கனகரத்தினம் பிரதிவாதி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 551-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ம் திகதி (25-7-77) முற் பகல் 10-00 மணிக்கு அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபாய் 4167 - 63 இன்னும் ரூபாய் 3500-ன் துக்கு 18-2-75 தொடக்கம் 5-12-75 வரைக்கும 9 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 434-22½ சதம் இதில் 8-11-76 ல் ரூபா 1300 கொடுபட்டுள்ளது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோயிற்பற்று அளவெட்டியிறை அலுக்கை நிலப்பரப்பு 6½ செம் பயிர் வான் பயிர்களும் வீடுகளும் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுருத்தும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு நாகமுத்து சிவலிங்கத்துக்கும் பங்காளருக்கும் மறுபேருக்கு முரிய வாதனம் மேற்கு கதிரவேலு செல்லத்துரையனுதனம் தெற்கு சீனி சின்னதம்பிக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்டவைகளுள் இதன் கிழக்கெல்லை ஒழுங்கையிலிருந்து இதன் வடக்கெல்லை யருகாக மேற்கெல்லைக் காணிக்குப் போகும் 8 முள அகலப் பாதை உரிந்து புற நீங்கலாக மிகுதி முழுவதும் அதற்குரியவைகளும்.

செ. விசாகரெத்தினம்

விற்பனவு ஆணையாளர்,

133 பருத்தித்துறை வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்

1-7-77.

கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாக மாவட்ட நீதிமன்றம்

வழக்கு. இல, M B 545.

கிருஷ்ணபிள்ளை நடராசா, பண்ணாகம் தெற்கு சுழிபுரம் வழக்காளி

எதிராக

1. முருகன் நடேசுவும்.
2. பெண் நல்லம்மாவும், இருவரும் காளுவன், சுளிபுரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் M B 545 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ம் திகதி (8-9-77) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 3.450/— 27-2-1975 தொடக்கம் 8-8-1976 வரைக்கும் ரூபாய் 2580/— க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 530/85 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் இறை "நிற்சாம்பற்றை" பரப்பு நில, இலாச்சம் எட்டு (8) வீடுகளும் பனைகள், வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் நாகேசு சின்னராசாவுக்குரிய காணியும், வடக்கு நாகேசு சின்னராசாவுக்கும் மறுபேருக்குமுரிய, காணிகள் மேற்கு கனகன் கைம்பெண் அன்னத்துக்குரிய காணி தெற்கு நாகேசு சிவகுருவுக்குரிய காணியும், ஒழுங்கையும் இதடகலிற் சொரியலாய் சரப்பு நில இலாச்சம் நாலும் (4) குழி பத்தும் (10) ஆகிய எழுபத்தரண்டில் நாற்பத்தொரு பங்கு 4/72.

14 டேவிட் வீதி. அ. போ. எதிர்மன்னசிங்கி

யாழ்ப்பாணம், கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

18-5-77 88. 8-7

நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. ஈடு 13353.

சமரபாகு தேவன் குறிச்சி செல்வரெத்தினம் கைம்பெண் சித்திரம் அல்லது மறுநாமம் ஞானபூங்கோதை,

எதிராக வாதி

வல்வெட்டித்துறை வல்வெட்டி கதிரவேலு பஞ்சரத்தினம்

பிரதிவாதி

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1977 ம் ஆண்டு ஆவணி மாதம் 8 ம் திகதி (8-8-77) திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த காணியில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். [கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 9.060/—]

தீர்வைத்தொகை

ரூபா 7,500/— உம் மேலும் ரூபா 5 000/— க்கு 24-2-75 தொடக்கம் 25-6- 976 வரையும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு பன்னிரண்டு வீத வட்டியும். 26-6-1976 தொடக்கம் விற்பனவுத் திகதி வரை கோட்டு வட்டியும் கோட்டுச் செலவு —

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று உடுப்பிட்டியிறை "ஒருக்கொம்பனுலடி நிர. 7 குளி, 4½ எல்லை கிழக்கு சுப்பர் நவரத்தினத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு ஒழுங்கையும் செல்லம் பெண் அம்மாவின் உரிமைக்காரருக்குடைய வாதனமும். [இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள், வடலிகள் அடங்கலிற் சொரியலாய் அரை வாசியும். பதிவு பருத்தித்துறை A, 273/90)

தி. வேலுப்பிள்ளை J. P.

செச்சர் வாரம்' ஏலதாரர் நீதிமன்ற விற்பனவு

வல்வெட்டித்துறை ஆணையாளர் விலைமதிப்பாளர்

8-7-1977 36 15-7

நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ இல. 1392 ஈடு

கனகசபை கிருஷ்ணமூர்த்தி, தெல்லிப்பளை கிழக்கு, தற்போது இலண்டன் தனது தந்துவகாரன் தெல்லிப்பளை கிழக்கு ஐயம்பிள்ளை கனகசபை மூலம், — வாதி

எதிராக

1. பேரம்பலம் சண்முகசாமி, பளை, வீமன்காமம், தற்போது புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.
2. பேரம்பலம் சிவகாமி, பளை, வீமன்காமம். தற்போது 289, லக்சுமி வீதி, புத்தளம்,
3. பேரம்பலம் மகள் பரமேஸ்வரி, பளை, வீமன்காமம் தற்போது 101, பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

பிரதிவாதிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1977 ம் ஆண்டு ஆவணி மாதம் 10ம் திகதி (10-8-1977) புதன் கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த காணிகளில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா. 15, 500/—]

தீர்வைத் தொகை

ரூபா. 8, 558/— உம். ரூபா, 5000/- க்கு 27-8-1976 தொடக்கம் 21-4-1977 வரை 12 வீத வட்டியும். 22-4-1977 தொடக்கம் முழுத்தொகைக்கும் விற்பனவுத் திகதி வரை 9% வட்டியும், வழக்குச் செலவு ரூபா, 656/70 சதமும்.

ஆதன இடாப்பு

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோயிற்பற்று, ஊரயிட்டியிறை "தேக்கன்டாவத்தை" நிலப்பரப்பு 60 உம், பனைகள், வடலிகளும் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு செல்லப்பா சிவஞானபுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு இதன் கீழ் விபரிக்கப்படும் 2 ம் ஆதனம். இதிற் சொரியலாய் அரை வாசியும் அதற்குரியவைகளும், முற்பதிவு H, 444/65.

2. ஷை இறை "அம்பலவன் கடத்தியவத்தையும் கூத்தியவத்தையும்" நிலப்பரப்பு 46½ உம், கிணறும், செம்பயிர் வான்பயிர்களும், எல்லை கிழக்கும், மேற்கும் ஒழுங்கையும், வடக்கு மேற்குறித்த 1ம் ஆதனம், தெற்கு எதிராளிகளின் ஆதனம், இதிற் சொரியலாய் நிலப்பரப்பு பதினாலும் [14] அதற்குரியவைகளும், முற்பதிவு H, 444/66.

தி. வேலுப்பிள்ளை J.P.

[ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு ஆணையாளர், விலைமதிப்பாளர்]

வல்வெட்டித்துறை 35 15-7

5-7-1977

மாமலைச் சாரலில் மாணிக்ககங்கை யோரத்தில்

கதிர்காமக் கந்தன் கோயில் கொடியேற்றம்

நாளை கதிர்காமக் சந்தன் பெருந் திருவிழா ஆரம்பமாகும் திவ்விய தினமாகும் ஈழந்திலுள்ள எல்லாப் பாகங்களிலுமிருந்து பல்லாயிரக் கணக்கானோர் பரவிப் பதிதி செய்யும் இவ் விழாக்காலம் முக்கியமானது.

ஆனால் முன்னிருந்த சமய சுதந்திரம் அங்கு இன்றிருக்கவில்லையே என்பதே யாத்திரிகர்களின் பிரார்த்தனை ஆகின்றது.

லிகிதர் தேவை

சைவ பரிபாலன சபையாரின் சைவப்பிரகாச அச்சுயந்திரசாலைக்குக் கணக்கு வைப்பு முறை தெரிந்த லிகிதர் ஒருவர் தேவை.

தகுதிக்கேற்ற சம்பளம் நிர்ணயிக்கப்படும். தராதரங்களைக் குறித்து 20-7-77 க்கு முன் காரியதரிசி, சைவபரிபாலன சபை 450 K, K S. வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குவிண்ணப்பிக்கவும்

க. சிற்றம்பலம்,

கௌரவ காரியதரிசி.

இந்துசாதனம்

சந்தா விபரம்

உள்ளூர் — ஆண்டு	18/—
புறநாடு — ஆண்டு	50/—
[ஆகாய வழி]	75/—

அதிபர்

450, கே கே, எஸ் வீதி

வண்ணார்பண்ணை,

யாழ்ப்பாணம்.

"பொன்னும் மெய்ப்
பொருளுந் தருவானைப்
போகமுந்திருவும்
புணர்ப்பானைப்
பின்னையென் பிழையைப்
பொறுப்பானைப் பிழை
யெல்லாந் தவிரப்
பணிப்பானை
இன்னதன்மையன் என்று
அறியொண்ணா
எம்மானை எளிவந்த
பிரானை
அன்னம் வைகும் வயற் பழ
னித்தணி ஆரூரானை
மறக்கலு மாமே"

— சுந்தரர்

கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. ஈடு 13272

1. ஆறுமுகம் சீனி
2. பெண் தங்கம் இருவரும், களபி, பிரதானவீதி புலோலி மேற்கு பருத்தித்துறை.

எதிராக —வழக்காளிகள்

சின்னவன் ஆழ்வான் பொன்னன் புலோலி கிழக்கு பருத்தித்துறை — எதிராளி

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியு மெனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியுமிதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்குமாதனத்தை 1977 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் திகதி 1-9-1977) வியாழக்கிழமை காலை 9 மணிதொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை ரூபா 5, 650 - 00.

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று புலோலி கிழக்கு மழவராயகுறிச்சியிறை 'சுங்காண்டி வளவு நிபர 4 (நாலு) பனைகள் வடலிகளும், எல்லை கிழக்கு சபாபதிப்பிள்ளை நடராசாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்கு சாம்பசிவம் பெண் சிவபாக்கியத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு ஆழ்வான் பொன்னனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலு.

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 2,718/- வும் மேலும் 1800/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 வட்டி வீதம் வழக்கு ஆணைத்த திகதியாகிய 1975 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23 - ந திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976 ம் ஆண்டு மாசி மாதம் 10 ந் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவால் ரூபா 150/- கூட்டப்பட்டுள்ளது. மிகுதிப் பணம் கொடுபட வேண்டும்.

க. நா. சுப்பிரமணியம்

புலோலி மேற்கு, கொமிஷனரும்

புலோலி, விலைமதிப்பாளரும்

12- 7- 77 34 15-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

உரிய நனுத்துரி யத்தி லிவனும்,
அரிய துரிய நனுவாதி மூன்றில்
பரிய பரதுரி யத்தில் பரனும்,
திரிய வரும்துரி யத்தில் சிவமே.

When resting in Turiyam in Jakram (Sakala Avasta) the soul is itself alone. When in exalted Turiyam in Turiyam beyond the first three states of the fourth state, it is associated with Param (Para Sakti or Divine Grace). When in transcendent Turiyatheetham (fifth state) it becomes (of the nature of Sivam).

It is probably these three states of ordinary Turiyam in Jakiram, exalted Turiyam in Turiyam and transcendent Turiyatheetham, that are described as சீவதுரியம் Jeeva Turiyam, பரதுரியம் Para Turiyam and சிவ துரியம் Siva Turiyam later on. The ordinary reader cannot expect to have more than a faint superficial idea of subjects of this nature It is only spiritually advanced souls that can properly realize their nature, பழுத்திடு பக்குவர் அறிவர் .....பரிசுதானே in the words of Thayumanavar.

Hindu Organ

Friday, July 15, 1977.

Irritating and Irresponsible !

Treading on terribly dangerous grounds, the President of the All-Ceylon Buddhist Congress, Sir Senerath Gunawardene, a seasoned statesman, who often had played the rôle of a political peace-maker shed caution and commonsense to the winds when at the Annual Sessions held last week, sponsered the surprising resolution that Sri Lanka be declared a Buddhist State and secured unanimous support of the attending members. That a senior politician who had been this country's Ambassador abroad should have resolved this way, at the most inopportune time with the General Election only a week away, baffles our imagination. No person with any regard for reason, commonsense, religious amity and communal harmony would agree with this senile statesman in his astounding proposition that a country peopled by multi-racial, multi-lingual and multi-religious groups should ever be anything but a secular state.

To this ambitious religious leader we commend the teachings of his own Faith, and refer him to the words of wisdom that have been enunciated by the leaders of the various religions of this world. To this exponent of exclusive privileges we submit the theories of sovereignty that have been time and oft propounded by the greatest of the philosophers of political science.

It is ironical that on the eve of the eclipse of the Twentieth Century propositions that tend to obscure the ways of reason should be put forward by no less a person than Sir Gunawardena who started his political a. b. c. as a trusted worker in the cause of national progress. He certainly knows that this country belongs to Christians, Muslims and Hindus as much as to Buddhists.

We do not propose to open a debate on the most sacred topic of religion. The prevalent systems of Faith and worship need no exposition several centuries after their commencement. All that we suggest to the people of this country is to remain religious by reaffirming the freedom that is inalienably bound with a person's Faith Such a determination will certainly deter any one from making any irreligious move in the form of securing sovereign rights for a particular Faith.

Elevating Thought for Electioneering Enthusiasts

"The man who controls his passions and desires is more than a King," said Somerset Maughan

It is plain that every body wants to be King during the period of a General Election.

And the suggestion quoted above becomes appropriate during electioneering.

To get rid of passions one should be religious. That is the answer,

Free Frontiers

It is generally presumed that most countries have concrete or barbed wire boundaries except where nature is the dividing line such as a long stretch of ocean or chain of mountains or a group of lakes. But curiously enough the border between Canada and the U. S. A. is a long stretch of undefended boundary. This mutual frontier according to the U. S. A. Horizon — July is 6415 kilometers along the contiguous states.

The former British Premier Winston S. Churchill once said:

"The long frontier from the Atlantic to the Pacific Oceans, guarded only by neighbourly respect and honourable obligations, is an example to every country and a pattern for the future of the World.

But today the more defended frontiers there are, more are the chances of friction

Pledges and Promises

Not a day passes without some party candidate or independent aspirant putting forward his scheme of work in the form of pledges and promises.

Citizen Mr. Commonsense is collecting all these statements for close scrutiny in the post election period with a view to evaluating the credibility of each candidate. Mr. Commonsense, however, knows that the these pledges and promises verily suggest the status of Utopia for us all and also understands that Utopia can only exist in one's imagination. One universal promise is the leading of the waters of mighty Mahaveli up to the North!

Most Significant Feature of a Temple – The Icon

Places of Worship Acquire Potentiality

(Here are extracts from a lengthy speech on "The Hindu Temple" by the well-known Temple Architect Shri V. M. Narasimhan published in the 'Times' Week ender of August 22 1971.

The Hindu Temple is in a class by itself as a place of worship. The Buddhist text Diviyavadana also states that "it is not the clay of the mould figure that is worshipped, but the immortal principles that are referred to by the mould forms (vide Ch. XXVI)

It is only exceptionally that we have an instance of image being absent in the temple — which is in the case in the great temple at Chidambaram, where it is the Void that is worshipped, but even this instance is no exception for the Void is merely a symbol; the Void is conceived of as the Abaya Linga and it is this Linga to which worship is offered in such a temple. So, ordinarily the most significant feature of the temple is the icon in it

If the icon is significant of the temple, it does not exclude, however, the other associations of the temple. It is only at a spot chosen specially that a temple is erected. Often it stands on the bank of a river-course or a water-spread and invariably it incorporates a sacred tree within its bounds — vide Brihat Samhita LV. 8.

These features are not without significance. In early thought any spot where a marvel was enacted or an important act occurred became sacred, it became a kshetra or a sacred spot, a field of active power, a place where moksha (final release) can be obtained — vide Garuda Purana (VVI 14.

(To be continued)

A PLEA FOR THE CENTENARY BIRTHDAY CELEBRATIONS

Of Kalayogi Ananda Coomaraswamy

Mr. S. Ampikaipagan, Principal Emeritus, Vaideeswara Vidyalayam, read an interesting paper on the "Ancestors of Dr. Ananda Coomaraswamy at the South Asian Studies Seminar held at the Jaffna Campus on the 29th June. Prof. K. Kailasanathakurukkal, Dean of the Faculty of Humanities presided. The Chairman in his introductory remarks, referred to the scholarship and academic interests and achievements of the speaker.

Mr Ampikaipakan stressed the importance of the study of the ancestors of Dr. Coomaraswamy for evaluating the achievements of the Kalayogi in their proper perspective. He said that the remote ancestor of the father of Coomaraswamy hailed from Vadamarachi and later settled in Manipay. The education and achievements of Sir Muthukkumaraswamy the father of the Kalayoki deserve special mention He was the first Asian and non-Christian (and non-Jew too) to be called to the bar. He was appointed by the then British Government to represent the interests of the Tamils unofficially. He was a distinguished member of the Legislative Council of Ceylon: Though he had a premature death, his wife the British-born Elizabeth Beebi brought up the young Coomaraswamy in a manner worthy of his later achievements in various fields of study. It is a matter of great regret that so far no government institution or the private associations except the Jaffna Archaeological Soeiety has taken any steps to celebrate the 100th birthday of the Kalayogi who had done so much for the cultural resuscitation of Sri Lanka and India." He said.

வாய்மூதி வழாது பெய்க மழைவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரச செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday July 15, 1977.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org